

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | பிப்ரவரி 09, 2023 | புரட்சி 22 | முழக்கம் 04 | விலை: ரூ.3.00


## மயிலையில் காந்தி படுகொலை கண்டனக் கூட்டம்

## ‘கருப்பு–சிவப்பு–நீலம்’ இணைந்து காவிகளின் மிரட்டலை சந்திக்கும்







*‘கருப்பு-சிவப்பு-நீலம்’ இணைந்து தமிழ்நாட்டில் காவியை விரட்டியடிக்க உறுதி ஏற்போம் என்று காந்தி படுகொலை கண்டனக் கூட்டத்தில் பேசிய அனைவரும் உறுதி ஏற்றனர்.*

சென்னை மயிலைப் பகுதி திராவிடர் விடுதலைக் கழக சார்பில் 6.2.2023 மாலை மந்தைவெளி இரயில் நிலையிம் அருகே காந்தி படுகொலை நாள் பொதுக் கூட்டம் மக்கள் கலை இலக்கிய மய்யக் குழு பாடகர் கோவன் கலை நிகழ்ச்சிகளோடு எழுச்சியுடன் தொடங்கியது.

காந்தியாரின் பிரிட்டிஷ் எதிர்ப்புப் போராட்ட வடிவத்தில் தங்களுக்கு முரண்பாடு உண்டு என்றும், பகத்சிங் நிலைப்பாட்டையே தங்களது அமைப்பு அங்கீகரிப்பதாகவும் கூறிய பாடகர் கோவன், காந்தி படுகொலையை பார்ப்பன சங்கிகள் திட்டமிட்டு நடத்தியதைக் கண்டிப்பதிலும், அது நம் அனைவருக்குமான வரலாறு தரும் எச்சரிக்கை என்பதிலும் நாம் இந்த மேடையில் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்ற தன்னிலை விளக்கத்தோடு நிகழ்ச்சியைத் தொடங்கினார்.

காந்தி படுகொலைக்குப் பின் இந்தியாவுக்கு காந்தி தேசம் என்று பெயர் சூட்டக் கோரினார் பெரியார். ஆனால் காந்தி பிறந்த குஜராத் இன்று மதவெறியின் வன்முறைக் களமாக மாறி இருப்பதையும் குஜராத் கலவரத்தில் முதல்வராக இருந்த மோடிக்கு பங்கு உண்டு என்பதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்திய பி.பி.சி. ஆவணப் படத்துக்கு ஒன்றிய ஆட்சி தடை போட்டதையும் மோடியின் செல்லப் பிள்ளை அதானி பங்கு மார்க்கெட்டில் செய்த தில்லு முல்லுகள்; மோடியின் மவுனம்; அதன் காரணமாக வங்கிகளிலும், எல்.அய்.சி.களிலும் பொது மக்கள் முதலீடு சூறையாடப்படுவதையும் ஆளுநர் ரவியின் அதிகார அத்துமீறல்களையும் மனுசாஸ்திரத்துக்கு மீண்டும் உயிரூட்ட நடக்கும் மோடி ஆட்சியின் பார்ப்பனிய பாசிசத்தையும் புரட்சிகாரப் பாடல்களுடன் கோவன் குழுவினர் மக்கள் முன் வைத்தனர்.

தமிழ்நாட்டில் கருப்பு-சிவப்பு-நீலம் மூன்றும் காவிகளைச் சந்திக்கும். தமிழ்நாட்டில் காவிகள் காலூன்ற முடியாது என்ற கருத்தை கலை நிகழ்வுகளில் வலியுறுத்தினர். ஒரு மணி நேரம் கருத்துச் செறிவோடு பார்ப்பனிய பாசிசத்துக்கு பதிலடியாக கலைநிகழ்ச்சி நிகழ்ந்தது.

தொடர்ந்து மாவட்ட செயலாளர் இரா.உமாபதி, பால்.பிரபாகரன், அன்பு தனசேகரன், மயிலை சுகுமார் உரையாற்றினர். சுகுமார் தனது உரையில், மக்களிடம் நிதி திரட்டச் சென்றபோது சந்தித்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். காந்தி கொலை செய்யப்பட்டார் என்பதோ, அவரைச் சுட்டுக் கொலை செய்த நாதுராம் கோட்சே ஒரு பார்ப்பனர் என்பதோ, நமது பாட நூல்களில் வரலாறாக எழுதப்படவில்லை. எனவே மாணவர்களுக்கே இது தெரியவில்லை. எனவே பாட நூல்களில் காந்தியின் வரலாற்றோடு அவர் கொலை செய்யப்பட்ட வரலாற்றையும் தமிழ்நாடு அரசு பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தொடர்ந்து பேசிய தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், காந்தியின் படுகொலைக்குப் பின்னால் ஒரு தத்துவம் இருக்கிறது. கோட்சே என்ற தனி மனிதர் செய்த கொலை என்று ஒதுக்கி விட முடியாது. இந்தியாவை இந்து நாடாக மாற்றுவதற்கு காந்தி தடையாக இருந்தார் என்பதே காந்தியின் கொலைக்கான தத்துவப் பின்னணி என்றார். காந்தி தென்னாப்பிரிக்காவில் நிறவெறி தீண்டாமைக்கு உள்ளாக்கப்பட்ட வரலாறு, இந்தியாவுக்குத் திரும்பி, அவர் காங்கிரசுக்கு தலைமையேற்ற போது காங்கிரசில் திலகர் போன்ற இந்துத்துவா சங்கிகளால் கட்டமைக்கப்பட்ட காங்கிரசில் பாதையை வேறு திசைக்கு மாற்றி தாழ்த்தப்பட்டோர், இஸ்லாமியர்களை உள்ளடக்கிய சுதந்திரப் போராட்ட அணுகுமுறைகளை விவரித்தார். கோவன் கூறியதைப் போல் பெரியார் இயக்கத்துக்கும் காந்திக்கும் இடையே காந்தியின் வர்ணாஸ்ரம ஆதரவு, காந்தியின் கல்விக் கொள்கை போன்ற பல பிரச்சினைகளில் முரண்பாடுகள் உண்டு. ஆனாலும் காலப்போக்கில் காந்தியின் சிந்தனையில் பார்ப்பனர்களைப் பற்றிய புரிதல் வரத் தொடங்கியதையும் அவரது கருத்துகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் சுட்டிக்காட்டினார். கோட்சேவுக்கும் சாவர்க்காருக்கும் இடையே நெருங்கிய உறவுகளையும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, பாகிஸ்தான் பிரிவினையின் வரலாற்றுப் பின்புலத்தில் காந்தியின் பங்கினைச் சுட்டிக்காட்டி ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் காந்தியாரைத் தீர்த்துக் கட்ட முன் வந்ததை விரிவாக விளக்கினார்.

நிறைவாகப் பேசிய பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், காந்தியின் படுகொலையை இயற்கை மரணமாக சித்தரித்து, குஜராத் பாட நூல்களில் எழுதப்பட்டிருப்பதையும் பழங்குடி மக்களை மலைவாழ் மக்கள் என்று முரளி மனோகர் ஜோஷி அமைச்சராக இருந்தபோது திரித்து அவர்கள் மண்ணின் மைந்தர்கள் என்ற வரலாற்றை மறைக்க முயன்றதையும் விளக்கினார். வரலாற்று திரிபுகளை எடுத்துக் கூறவே இந்தக் கூட்டம் என்று விளக்கி 45 நிமிட நேரம் பேசினார். (வழக்கறிஞர் திருமூர்த்தி, பால் பிரபாகரன் உரை, தனியே வெளி வரும்)

கூட்டத்தில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு 70 சந்தாக்களுக்கான தொகையை பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரனிடம் மயிலைப் பகுதி கழகத் தோழர்கள் மேடையில் வழங்கினர்.

கூட்டத்தில் வழக்கறிஞர் திருமூர்த்தியின் தந்தையார் இராமையா, கோவை இராம கிருட்டிணன் துணைவியார் வசந்தி ஆகியோர் படங்களை பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்தார்.

**– நமது செய்தியாளர்**

## அனைத்து இந்துக்களையும் சேலம் திருமலைகிரி கோயில் நுழைவுக்கு அனுமதிக்கக் கோரி சேலத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்

சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 02.02.2023 வியாழன் காலை 11.00 மணியளவில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு சேலம் திருமலை கிரி கோவிலில் அனைத்து தரப்பு இந்து மக்களும் வழிபட ஆலய நுழைவை தமிழ் நாடு அரசு உறுதிப் படுத்த வேண்டி கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் க.சத்திவேல் தலைமை தாங்கினர்.

கோரிக்கை ஆர்ப்பாட்டத்தில் தலைமைக்குழு உறுப்பினர் அ.சக்திவேல், மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, இளைஞரணி அமைப்பாளர் தேவபிரகாசு, சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் ஆகியோர் ஆர்ப்பாட்ட நோக்கத்தை விளக்கி உரை நிகழ்த்தினர். தோழர்கள் தங்களது உரையில் “கிராமப் பகுதிகளில் தொடர்ந்து நிலவும் ஜாதிப் பாகுபாடுகள், தீண்டாமைக் கொடுமைகள் இவற்றை தமிழ்நாடு அரசு கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், அதேபோல அறநிலையத் துறை கட்டுபாட்டின் கீழ் உள்ள அனைத்து கோவில்களிலும் அனைத்து




இந்து மக்களும் வழிபட தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும்” தெரிவித்தனர்.

நிறைவாக சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.டேவிட் நன்றி கூற ஆர்ப்பாட்டம் நிறைவடைந்தது. ஆர்ப்பாட்டத்தை விளக்கி பொதுமக்களுக்கு துண்டறிக்கை வழங்கப்பட்டக. ஆர்ப்பாட்டத்தில் ஏற்காடு, சேலம், இளம்பிள்ளை, நங்கவள்ளி, வனவாசி, மேட்டூர், மேட்டூர் ஆர்.எஸ். ஆகிய பகுதிகளில் இருந்து பொறுப்பாளர்களும், தோழர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

தலையங்கம்

## சரணாகதிப் படலம்

பாரதிய ஜனதாவின் கயிறுகள் அ.இ.அ.தி.மு.க.வின் அணிகள் என்ற பொம்மையை ஆட்டுவித்து பொம்மலாட்டம் நடத்துவதை இனியும் மறைக்க முடியாது. ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தேர்தலில் இது வெளிச்சமாகிவிட்டது.

பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை முதலில் தனது கட்சியே வேட்பாளரை நிறுத்தும் என்றார். தேர்தல் பணிக் குழுவையும் நியமித்தார். எடப்பாடி பழனிச்சாமி, கட்சிக்கு நான் தான் தற்காலிக பொதுச் செயலாளர்; நானே அ.இ.அ.தி.மு.க. – எனவே நாங்கள் வேட்பாளரை நிறுத்துவோம் என்றார். பா.ஜ.க.விடம் நேரில் சென்று ஆதரவு கேட்டார். நீண்ட இழுபறிக்குப் பிறகு ஒரு வேட்பாளரை அறிவித்தார். மற்றொரு அணியான ஓ. பன்னீர்செல்வம் தேர்தல் ஆணையத்தின் பதிவுகளில் தாமே கட்சியின் ஒருங்கிணைப்பாளர் என்றார். தனது கட்சி, பா.ஜ.க. வேட்பாளரை நிறுத்தினால், ஆதரிக்கும்; நிறுத்தவில்லை என்றால், தங்கள் கட்சியே வேட்பாளரை நிறுத்தும் என்றார். இரண்டு கட்சிகளும் பா.ஜ.க.வின் முடிவுக்காக விடிய விடிய நாள்கணக்கில் காத்திருந்ததுதான் மிச்சம்.

பிறகு, ஓ. பன்னீர்செல்வமும் ஒரு வேட்பாளரை நிறுத்தி அவரை வேட்பு மனுவையும் தாக்கல் செய்ய வைத்தார். பா.ஜ.க. மேலிடம் இரண்டு அணிகளையும் குழப்பத்தில் தவிக்க விட்டு வேடிக்கைப் பார்த்தது. வேட்பு மனு தாக்கலுக்கு இறுதிக் கட்டம் நெருங்க பா.ஜ.க. தான் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்தது. எடப்பாடி பழனிச்சாமிக்குத் தான் ஆதரவு என்றும் அறிவித்தது. நாடாளுமன்றத் தேர்தலில் எடப்பாடி அணியின் ஆதரவுக்காக இப்படி ஒரு முடிவை எடுத்ததோடு ஓ. பன்னீர்செல்வம் தனது வேட்பாளரைத் திரும்பப் பெற்று எடப்பாடி அணியை ஆதரிக்க வேண்டும் என்று ஆணையிட்டது. ‘அப்படியே ஆகட்டும்’ என்று ஓ.பி.எஸ். அணி பச்சைக் கொடி காட்டியது. பிறகு இரட்டை இலை சின்னத்தை எடப்பாடி அணிக்கு வழங்க எதிர்ப்பு தெரிவிக்காமல் ஓ.பி.எஸ். அணி பின் வாங்கியது. இரட்டை இலை சின்னத்தில் யார் நின்றாலும் ஆதரிப்போம் என்றது. இதே அணி தான் தாமரை சின்னம் நின்றால் மட்டும் ஆதரிப்போம் என்று முதலில் கூறியது. தாமரை போய் இரட்டை இலை வந்தது.

இடையில் இரண்டு அணியிலும் இரண்டாவது கட்டத் தலைவர்கள் ‘காது கூசும்’ அளவுக்கு சேறு வாரி ஒருவர் மீது ஒருவர் வீசிக் கொண்டனர். ஆனால் பா.ஜ.க.வின் சித்து விளையாட்டுகளைக் கண்டிக்கும் முதுகெலும்பு இரு அணிக்கும் இல்லாமல் போய் விட்டது. பல நாட்கள் தொடர்ந்து தொலைக்காட்சி விவாதங்களில் இரண்டு அணிகளும் மோதிக் கொண்டு வசைமாறி பொழிந்ததையும் நாடு பார்த்தது. இப்போது கைகோர்த்துக் கொண்டு ஓட்டு கேட்டு வாக்காளர்களிடம் வரப் போகிறார்களாம். அம்மாவின் பெயரில் கட்சி நடத்துகிறவர்கள் பா.ஜ.க.வுக்கு அடிமைப் பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டார்கள்.

1967 இல் அண்ணா அமைத்த கூட்டணியில் திராவிட இயக்கக் கொள்கை எதிரியான இராஜகோபாலாச்சாரியின் சுதந்திரா கட்சி இடம் பெற்றிருந்தது. தேர்தலில் வெற்றி பெற்றவுடன் இராஜாஜி என்ற ஆச்சாரியாரை கழற்றி விட்டு, பெரியாரிடம் வந்து சேர்ந்தார் அண்ணா. இந்த ஆட்சியே பெரியாருக்கு காணிக்கை என்றார்.

அவசர நிலையை அமுல்படுத்தி தி.மு.க.வினரை ‘மிசா’ சட்டத்தில் கைது செய்த காங்கிரஸ் தலைவர் இந்திரா காந்தி மீண்டும் தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொள்ள விரும்பியபோது கடற்கரைக் கூட்டத்தில் அவசர நிலைப் பிரகடனம் செய்தமைக்காக தி.மு.க.விடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டுதான் தனது உரையைத் தொடங்கினார்.

தி.மு.க.வை விட்டு வெளியேறிய எம்.ஜி.ஆர்., அவசர நிலை காலத்தில் காங்கிரசை ஆதரித்தார். ராஜீவ் பிரதமராக இருந்த காலத்தில் அவர் ஈழத் தமிழர்களுக்கு குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலை எடுத்தபோது எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்கு கோடி கோடியாக நிதி உதவி செய்து அவர்களின் தாய்நாடு விடுதலைப் போராட்டத்துக்கு உதவினார். தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய அரிசியை காங்கிரஸ் ஆட்சி அனுப்ப மறுத்தபோது, ஒன்றிய ஆட்சியை எதிர்த்து, கடற்கரையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியவர் எம்.ஜி.ஆர்.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது அவரது கூட்டணியில் தனது கட்சி சார்பில் அமைச்சர் பட்டியலை அனுப்பிய ஜெயலலிதா, அதை ஏற்க வாஜ்பாய் காலதாமதம் செய்தபோது, கூட்டணி அமைச்சரவைக்கு ஒப்புதல் கடிதம் வழங்க மறுத்து வாஜ்பாயை திக்குமுக்காடச் செய்தார். ஒரு கட்டத்தில் காங்கிரஸ் கூட்டணியும் வேண்டாம்; பா.ஜ.க. கூட்டணியும் வேண்டாம் என்று நாடாளுமன்றத்தில் தனது கட்சியை தனியாகக் களமிறக்கி வெற்றி வாகை சூடச் செய்தார்.

இப்படி முதுகெலும்புடன் கட்சிகளை நடத்திய தமிழ்நாட்டில், ‘சரணாகதிப் படலம்’ நடத்தி தமிழ்நாட்டையே பதவி வெறிக்கு அடமானம் வைக்கத் துடிக்கின்றன அ.இ.அ.தி.மு.க. அணிகள். புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி என்றெல்லாம் உதட்டளவில் பேசிக் கொண்டு அவர்களின் ‘சுயமரியாதைப்’ பாதையை விலை பேசிக் கொண்டிருப்பது தமிழ்நாட்டுக்கே அவமானம்!

# அறநிலையத் துறையைக் கலைக்கக் கோரும் அண்ணாமலைக்கு ஆன்மிகப் பேச்சாளர் சுகி. சிவம் பதிலடி



தமிழ்நாட்டில் பாஜக ஆட் சிக்கு வந்தால் இந்துசமய அறநிலையத் துறையை ஒழிப்பது தான் முதல் வேலை என்று பாஜக மாநிலத் தலைவர் கே. அண்ணா மலை கூறியுள்ளார். இந்த பேச்சை அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டித்துள்ளனர். இந்துசமய அறநிலையத்துறையை ஒழிப்பது என்ற பேச்சு, கோவில் சொத்துக்களை தனிநபர்கள் கொள்ளை யடிக்கவே உதவி செய்யும் என்று கடுமையாக விமர்சித்துள்ளனர். இதுகுறித்து ஆன்மீகப் பேச்சாளரும் அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினருமான சுகி சிவம் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா ஆகிவிடுவார். சித்தப்பா பெண்ணை எப்படி கல்யாணம் முடிப்பது என்று ஒருவன் கேட்டால் எவ்வளவு குழந்தைத்தனமாக இருக்குமோ, அவ்வளவு குழந் தைத்தனமானது பாஜக அண்ணா மலையின் பேச்சு. பாஜக ஆட்சிக்கு வந்தால் என்று அவர் கூறுவது கற் பனையின் உச்சம்.

பாண்டிச்சேரி கூட்டணி அரசில் யார் இருக்கிறார்கள்? அங்குள்ள திருநள்ளாறு கோவில் யார் கட்டுப் பாட்டில் உள்ளது? முதல்வர் ரங்கசாமி கூட்டணி அரசில்தானே பாஜக உள்ளது.எனவே முதல்வர் ரங்க சாமி இந்துக் கோவில்களை இந்துக் களிடமே விட்டுக்கொடுத்து விட்டு, திருநள்ளாறு கோவில் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்று பாஜக அறிக்கை வெளியிடுங்களேன். உங்கள் இலட்சியம் நிறைவேறட்டுமே. பாஜக ஆட்சி நடைபெறும் கர்நாடக மாநிலத்தில் அரசு அதிகாரிகள் கோவில் நிர்வாக அதிகாரிகளாக இருக்கிறார்களா? இல்லையா? சொல்லுங்கள். கர்நாடகாவிலும் பாண்டிச்சேரியிலும் இந்து சமய அறநிலையத்துறை இருக்கிற போது, அங்கு சென்று பாஜகவினர் போராட்டம் நடத்துங்களேன். பாஜக ஆளும் மாநிலங்களில் இந்து சமய அறநிலையத் துறை இருக்கிறபோது,தமிழ்நாட்டில் மட்டும் இருக்கக் கூடாது என்று சொல்வது ஏன்?

இந்து சமய அற நிலையத்துறை எப் போது உண்டானது? எதனால் உண்டா னது? இதனை முன் மொழிந்தவர்கள் யார் என்ற வரலாற்றை சரியாகப் படித்திருந் தால், இன்றைக்கு அப்படி பேசியிருக்க முடியாது. கோவில் களில் அரசு தலையிடக்கூடாது என்று கொள்கை முடிவு எடுத்தால், முதலில் எழும் கேள்வி என்பது கோவில்களை யாரிடம் ஒப்படைப்பது? இந்து கோவில்களில் துணை ஆணையர், கூடுதல் ஆணையர் என்று அதிகாரி களை நியமித்து அரசு, கோவில்களை நிர்வகித்து வருகிறது. இந்தக் கோவில்களை யாரிடம் திருப்பிக் கொடுக்கப் போகிறார்கள்? கோவில் குருக்களிடமா? சிப்பந்தி களிடமா? ஊரில் உள்ள பணக்காரர்களிடமா? கோவிலுக்கு நன்கொடை கொடுத்தவர்களைக் கொண்டு ஒரு கமிட்டி அமைத்து அவர்களிடம் கோவில்களை கொடுக்கப் போகிறார்களா? வாய்க்கு வந்தபடி பேசுவது சுலபம். ஆனால் நடைமுறையில் கோவிலை யார் நிர்வகிக்கப் போகி றார்கள் என்ற கேள்வி எழுகிறது.

இந்துசமய அறநிலையத் துறையைக் கொண்டு வந்தவர் நாத்திகர் அல்ல. இன்னும் சொல்லப் போனால் நாத்திகர்கள் இயக்கம் மீது கோபம் கொண்ட, முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்தான் இதனை கொண்டுவந்தார். இந்த தகவல் எத்தனைப் பேருக்குத் தெரியும். கோவில் சொத்துக்களை முதன் முதலில் தனியாரிடம் மாற்றிக் கொடுத்தவர்கள் ஆத்திகர்கள் தான்; நாத்திகர்கள் அல்ல.கோவி லுக்கு மற்றவர்களால் இனாமாக வழங்கப்பட்ட நிலங்களை தவறாக பயன்படுத்தியது யார் என்பதை அறிய, கடந்த 200 வருட ஆவணங்களை எடுத்துப் பாருங்கள். நிறைய வழக்குகளை படித்துப் பார்த்த பிறகு இந்த முடிவுக்கு வரு கிறேன்

கோவில் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தியது தெரிந்து தான், அதுகுறித்து அன்றைய முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சட்டமன்றத்தில் பேசினார். அதிக தவறுகள் நடந்த பிறகு தான் கோவில் சொத்துக்களை அரசு காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உருவானது.கோவில் நிர்வாகத்தில் தவறுகள் நடந்தால் அதை சுட்டிக்காட்டி வெளிக்கொண்டு வந்து, சரி செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு, கோவில்களை தனி யாரிடம் கொடுக்க வேண்டும் என்று பேசுவது முறையானது அல்ல.

திருமலை நாயக்கர் கட்டிய கோவிலை யாரிடம் கொடுக்கப் போகிறீர்கள்? சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் கட்டிய கோவிலை இன்று யாரிடம் கொடுக்கப் போகிறீர்கள்? கோவிலை தனியாரிடம் கொடுங்கள் என்ற வாதமே, உணர்வை தூண்டுவதற்கான,வெறியை தூண்டுவதற்கான வார்த்தையே. இது சரியான தீர்வு அல்ல.

திருவண்ணாமலை தீபத்திரு விழாவிற்கு வந்தவர்கள் 32 லட்சம் பேர். இவர்கள் வந்துசெல்வ தற்கான ஏற்பாடுகளை செய்தது அரசுதான். கோவில் அரசு கட்டுப் பாட்டில் உள்ளதால்தான் எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் இவ்வளவு மக்கள் வந்து செல்ல முடிகிறது. இதுவே கோவில் தனியாரிடம் இருந்தால் இதைச் செய்ய முடியுமா? எதையாவது பிரச்சனையை கிளப்பி சண்டை போட நினைக்கிறவர்கள்தான் கோவிலை தனியாரிடம் ஒப்படையுங்கள் என்று பேசுகிறார்கள்.

இந்துசமய அற நிலையத்துறையின் 50 ஆண்டு கால வரலாறு தெரிந்தவர்கள் இப்படி பேச மாட்டார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# உடல் மற்றும் கண்கள் கொடை

திராவிடர் விடுதலைக் கழக குமாரபாளையம் நகரச் செயலாளர் செ .வடிவேலு தந்தையார் செல்லமுத்து உடல் நலக்குறைவால் 28.11.2022 மதியம் அன்று சுமார் 2.45 மணியளவில் இயற்கை எய்தினார். அவர் இறந்த ஆறுமணி நேரத்திற்குள் அவரின் இரண்டு கண்களும் பார்வை இழந்தவர்களுக்கு பார்வை கிடைக்கும் வகையில் ஈரோடு அரசன் கண் மருத்துமனைக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டது.

அவரின் உடல் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மாணவர்களின் ஆராய்ச்சிக்கு உதவும் விதமாக கொடையாக நாமக்கல் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் பொறுப்பாளர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது அங்கிருந்து மருத்துவப் பேராசிரியர்கள் மிகுந்த மகிழ்வுடன் பெற்று கொண்டது மட்டுமில்லாமல் இது தான் இந்த மருத்துவக் கல்லூரிக்குக் கிடைத்த முதல் உடற்கொடை ஆகும். தொடர்ச்சியாக பெரியார் இயக்கத்தை சார்ந்தவர்கள் இப்பணியைச் செய்வது பாராட்டத்தக்கது என்று பாராட்டினார்.

தோழர் வடிவேல் மட்டும்தான் அவருடைய குடும்பத்தில் பெரியாரிய கொள்கையை ஏற்றுக் கொண்டவர். இருப்பினும் வடிவேல் மற்றும் கழகத் தோழர்களின் வேண்டு கோளையேற்று அவருடைய குடும்பத்தினர் முன்வந்து உடல் மற்றும் கண்களை கொடையாகக் கொடுத்துள்ளது மிகுந்த பாராட்டத்தக்க முன்னுதாரணமான செயல் ஆகும்.

உடற் மற்றும் கண்கள் கொடை அளிப்பதற்கு மருத்துவமனைகளைத் தொடர்பு கொண்டு அதற்குரிய பணிகளை குமாரபாளையம் திவிக நகர தலைவர் தண்டபாணியும் நாமக்கல் மாவட்ட திவிக தலைவர் சாமிநாதனும் மேற்கொண்டனர்.

# ‘அருட்பா-மருட்பா’ மோதல்: பின்னணி என்ன?

விடுதலை இராசேந்திரன்

நாவலர் வள்ளலாரின் பாடல்கள் ‘திருவருட்பா’ அல்ல என்று மறுத்தார், தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் எனும் ஐந்து புராணங்கள் தான் திருவருட்பாவே தவிர மற்றவை அல்ல என்றார், வள்ளலார் பாடல்களை நேரடியாக கண்டித்து மருட்பா என்றார், பார்ப்பனர்களைக் கடுமையாக சாடும் திருமந்திரத்தையே அருட்பா பட்டியலில் சேர்க்காதவர் அவர், ஆறுமுக நாவலர் கருத்துக்கு எதிராக 1868இல் ‘திருவருட்பா தூசன பரிகாரம்’ எனும் நூலை திருமயிலை சண்முகம் பிள்ளை என்பவர் எழுதி வெளியிட்டார்.


அருட்பா மருட்பா விவாதங்கள் அனல் பறக்கத் தொடங்கின; அடிகளாருக்கு ஆதரவாக அட்டாவதனம் வீராசாமி செட்டியார், இறுக்கம் இரத்தினம் முதலியார், பூவை கல்யாணசுந்தர முதலியார், செய்கு தம்பி பாவலர் உள்ளிட்ட சுமார் 23 பேர் களமிறங்கினர்.

மருட்பாவுக்காக களமிறங்கியவர்களில் திருவாடுதுறை வேதாரண்யம், திருவண்ணாமலை மற்றும் தருமபுரம் ஆதீனங்கள், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, உவே சாமிநாத அய்யர், நா. கதிரைவேற் பிள்ளை, திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் உள்ளிட்ட சுமார் 15 பேர்.

உண்மையில் இந்த மோதலின் பின்னணி என்ன? அவற்றை சுருக்கமாக இவ்வாறு பட்டியலிடலாம்.

- ஆறுமுக நாவலார், கதிரை வேற்பிள்ளை முதலியோர் வள்ளலாரை தனிப்பட்ட முறையில் இழிவு செய்யும் பரப்புரையில் இறங்கினர். அவர் பிறந்த, ‘கருணீகர்’ என்ற பிரிவு சைவத்தில் கீழானது என்று ஜாதிகளின் அடிப்படையிலும் இழிவு செய்தனர்.
- ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை கடுமையாக விமர்சித்து துண்டுப் பிரசுரங்கள், நூல்கள் எழுதி வெளியிட்டனர்.
- தன்னை ‘சாமி’ என்றோ, ‘அடிகள்’ என்றோ அழைப்பதை வள்ளலார் விரும்பவில்லை. தனது பாடல் தொகுப்பை வேலாயுத முதலியார் அந்தப் பெயர்களோடு வெளியிட்ட போது அதில், கடும் கோபமடைந்த வள்ளலார், இராமலிங்கம் பிள்ளை என்று மட்டுமே தனது பெயரைப் போட வேண்டும் என்றார். ஆனால் தனக்குத் தானே, ‘சாமி’ என்று தற்பெருமையோடு பெயர் சூட்டிக் கொண்டதாக, கதிரை வேற்பிள்ளை போன்றவர்கள் பிரச்சாரம் செய்தார்கள்.
- அப்பர், சம்மந்தர், நாவுக்கரசர் போன்றவர்கள் அறிவியலுக்கு எதிரான ‘வித்தை’களைக் காட்டி சைவத்துக்கு இழுத்தது போல வள்ளலாரும் செத்தவரை எழுப்பினார் என்ற கதையும் உண்டு. ஆறுமுக நாவலர், வள்ளலார் மோசடி வித்தைகளை செய்கிறார் என்பதை மட்டும் கண்டித்தார். அதே ‘வேலை’களை செய்த அப்பர் சம்பந்தர்களைக் கண்டிக்க வில்லை.
- தில்லை தீட்சதர்களுக்கும் வள்ளலாருக்கும் இடையே பல முரண்பாடுகள் உண்டு. சிதம்பரத்தில் நிலையாகத் தங்காமல் அவர் வெளியேறியதற்கு அடிப்படையான காரணம் தீட்சதர்கள் மீது அவர் கொண்டிருந்த மாறுபாடு களும், வெறுப்பும் தான். அதே நேரத்தில் தீட்சதர்களை நேரடியாகக் கண்டித்த ஆறுமுக நாவலரைப் பழிவாங்க, வள்ளலாரை, தீட்சதர்கள் பயன்படுத்த முயன்றனர். சிதம்பரம் பேரம்பலத் தில் ஆறுமுக நாவலருக்கு எதிராக தீட்சதர்கள் திரண்டு, அதில் உரையாற்ற - வள்ளலாரை அழைத்தனர் (1869-ஜூன் 7ஆம் தேதி).
- பேரம்பலக் கூட்டத்தில் என்ன நடந்தது என்பதை ‘ஃபிரிமேன்’ (Freeman) பத்திரிகை (1869 டிசம்.16) விரிவாகப் பதிவு செய்தது. வள்ளலார் பேசும் போது, “ஆறுமுகநாவலரின் ‘நாவலர்’ பட்டம் குறித்து கடுமையாக விமர்சனம் செய்தார். நா + அலர் எனப் பிரித்து பொய்யர்; நாவில் பழி சொல் உடையவர் எனப் பலவாறு பொருள் உண்டு என்று பேசினார். அப்போது ஈசான சிவாச் சாரியார் என்பவர் எழுந்து உங்கள் கருத்துப்படி தான் திருவாவடுதுறை ஆதினம் நாவலர் பட்டம் தந்ததா? என்று எதிர் கேள்வி கேட்டார்.

அப்போது தலைமை தீட்சதர் சபா நடேசர் ஆவேசத்துடன் ஆறுமுகநாவலர் இருக்கும் இடத்துக்குச் சென்று, அவரை இழுத்துக் கொண்டு வந்து நய்யப்புடைப்பதற்கு தாம் விரும்புவதாகவும் மற்றவர்கள் தமக்கு உதவியாய் வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ஆயினும் எவரும் போக வில்லை” என்று அந்த ஏடு பதிவு செய்துள்ளது. இந்த இரண்டு நிகழ்வுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆறுமுக நாவலர் கடலூர் மஞ்சக் குப்பம் நீதிமன்றத்தில் தீட்சதர், இராமலிங்கர் உள்ளிட்ட ஆறு பேர் மீது வழக்கு தொடர்ந்தார். (தீட்சதப்



பார்ப்பனர்களின் பிரித்தாளும் சூழ்ச்சியினையும் விவாதத்தை வன்முறையாக மாற்ற துடித்ததையும் இதிலிருந்து உணர முடியும்) வழக்குப் பற்றிய முழுமையான சரியான பதிவுகள் இல்லை என்கிறார், ஆய்வாளர் ப. சரவணன். இதில் வள்ளலார் மீது தொடரப்பட்டது மான நட்ட வழக்கு. தீட்சதர்கள் மீது மான நட்டம் மற்றும் அச்சுறுத்தல் வழக்குகள். தீர்ப்பில் நான்கு தீட்சதர்களும் விடுவிக்கப்பட்டனர். வள்ளலாரும் விடுவிக்கப்பட்டார். முதல் எதிரி சபா நடேசர் தீட்சதருக்கு ரூ.50 அபராதம் தவறினால் ஒரு மாதம் சிறை; தீர்ப்பு வழங்கிய நீதிபதி ரோபார்ட்ஸ் (Robarts). தீர்ப்பு வழங்கியது முத்துசாமி அய்யர் என்பது தவறான வதந்தி.

முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய சேதி - வழக்கு அருட்பா எதிர் மருட்பா தொடர்பானது அல்ல; மான நட்ட வழக்கு என்பதுதான் உண்மை. ஆனால் வையாபுரிப் பிள்ளை, மா.பொ.சி. மற்றும் குமுதம் ஏட்டில் தொடர் எழுதிய துமிலன் போன்றவர்கள் இராமலிங்கர் எழுதியது அருட்பா இல்லை என்பதற்காகவே வழக்கு தொடரப்பட்டதாக கற்பனையான கதைகளை வரலாறுகளாக எழுதி வைத்துள்ளனர். அதுவும் சாகித்ய அகாடமி பரிசு பெற்ற தனது ‘வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு’ நூலிலேயே தவறான தகவலைப் பதிவு செய்துள்ளார் மா.பொ.சி.

- வள்ளலார் பிறந்த ஜாதியைக் கூறி இழிவு செய்தனர்.
- சிதம்பரம் பேரம்பலத்தில் நடந்த கூட்டத்தில் காரசார மோதல்.
- மான நட்ட வழக்கை அருட்பா-மருட்பா என்று தவறாக சித்தரித்தார் ம.பொ.சி.
- ‘வேதம்’ என்ற சொல்லையே எதிர்த்த வள்ளலார்.

நாவலர் என்ற சொல்லுக்கு இராமலிங்கர் தந்த பொருள் விளக்கம் தீட்சதர்கள் தந்த அழுத்தத்தினால் தான்; பேரம்பலக் கூட்டத்தில் நாவலர் சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருமாறு தீட்சதர்கள் கேட்டதால் அது குறித்து மட்டுமே பேசினார். வேறு எதுவும் ஆறுமுக நாவலர் பற்றி இராமலிங்கர் பேசவில்லை என்றும், ஈசான சிவாச்சாரியார் தன்னை நோக்கிக் கேள்வி எழுப்பிய போதும் வள்ளலார் கண்மூடி அமைதியே காத்தார்’ என்றும் தனஞ்செய இராச சிங்கம் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

மேலே விவரிக்கப்பட்டது முதற்கட்ட போராட்டம் தான். அதற்குப் பிறகு ஆறுமுக நாவலரின் மாணவர் ந. கதிரைவேற்பிள்ளை இருபது ஆண்டுகள் கழித்து, இப்போராட்டத்தை மீண்டும் 1903இல் தொடங்கினார்.

வள்ளலார் குறித்து கதிரைவேற்பிள்ளை தவறாகப் பல நூல்களை எழுதினார். அதற்காக வள்ளலாரின் தமயன் மகன் வடிவேலுப் பிள்ளை அவர் மீது மான நட்ட வழக்கு தொடர்ந்தார். உ.வே.சாமிநாத அய்யர் மற்றும் கதிரை வேற்பிள்ளையால் சிதம்பரத்தி லிருந்து திரட்டி வரப்பட்டவர்களும் திரு.வி.க.வும் வள்ளலாருக்கு எதிராக சாட்சி கூறினார்கள்.

சாட்சி கூற வந்ததால் திரு.வி.க. தேர்வு எழுத முடியாமல் அவரது உயர்கல்வி தடைபட்டது என்று ம.பொ.சி. இதிலும் உண்மைக்கு மாறான கருத்தை எழுதி பரப்பினார். உண்மையில் கதிரைவேற் பிள்ளைக்கும், வில்வபதி செட்டியார் என்பவருக்கும் நடந்த அடிதடிச் சண்டை தொடர்பான வழக்கில் சாட்சி கூறப் போனதாலேயே திரு.வி.க. தனது உயர்கல்வியைத் தொடர முடியவில்லை.

வழக்கின் தீர்ப்பு கதிரைவேற்பிள்ளைக்கு சாதகமாகவே இருந்தது உண்மைதான்; ஆனாலும் சாட்சியங்களாக வள்ளலாருக்கு எதிராக எழுதப்பட்ட நூல்கள் என்று கதிரைவேற்பிள்ளை முன் வைத்தது அவரே எழுதிய நூல்கள் தான். அவர் சாட்சிக்கு வைத்த பல நூல்கள் அச்சிடப்படவே யில்லை. (உ.ம் - குதர்க்காரணிய நாச மகா பரசு கண்டனம்) மறைமலையடிகளும் செய்கு தம்பி பாவலரும் (பிறப்பால் ஓர் இஸ்லாமியர்). வள்ளலார் பக்கமே நின்று நியாயங்களைப் பேசினார்.

வள்ளலார் தொடங்கிய ஞான சபையில் இணைந்த பலரும் தனது கொள்கைகளுக்கு நேர்மாறாக செயல்படுவதை உணர்ந்த அவர், சபையை இழுத்து பூட்டுப் போட்டு பூட்டி, சாவியை தன்வசம் எடுத்துக் கொண்டார். அவர் ஒளி வடிவத்தில் கடவுளைப் பார்த்ததுக்கூட எதிர்காலத்தில் குத்துவிளக்காக மாறி இந்து மதச் சடங்காகி விடக்கூடாது என்பதற்காக விளக்கு தகரத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றார்.

ஒரு முறை காஞ்சி சங்கராச்சாரியுடன் உரையாடியபோது சமஸ்கிருதமே ‘மாத்ரு பாஷை’ (அனைத்து மொழிக்கும் தாய்) என்று கூறியபோது, அப்படியானால் தமிழ் ‘பித்ரு பாஷை’ (தந்தை மொழி) என்று வாதிட்டு, தமிழின் சிறப்பை விரிவாக விளக்கி வாதம் செய்திருக்கிறார், அடிகளார்.

பூணூல், உச்சிக்குடுமி என்ற பார்ப்பன அடையாளங்களுக்கு ஞானசபையில் இடமில்லை. அதனால் அவரது சீடரான சபாபதி சிவாச்சாரியார் அந்த அடையாளங்களை நீக்கிக் கொண்டார்.

தில்லை நடராசன் கோயிலுக்கு தரிசிக்கச் சென்ற அடிகளார், இரகசிய லிங்கத்தைக் காட்டுமாறு தீட்சதர்களிடம் கேட்க, தீட்சதர்கள், கோயிலுக்குள் உங்களுக்கான இடத்தில் போய் தரிசியுங்கள்; கர்ப்பகிரகம் அருகே வரக் கூடாது என்று கூறினர். சினமடைந்த வள்ளலார், உங்களுக்கு எதிராக ஒரு தலம் உண்டாக்கி, நடராசனையும் அங்கே அழைத்துக் கொள்கிறேன் என்று சபதம் செய்தார். தில்லைக்கு அருகே வடலூரில் தனது சன்மார்க்க சபையை உருவாக்கியதற்கு காரணம் அதுதான் என்கிறார் பு.பாலசுந்தரநாயகர். தனது “இராமலிங்கப் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் - மருட்பா மறுப்பு” என்ற நூலில் இது பதிவாக்கியுள்ளார். திரு.வி.க.வும் தனது வாழ்க்கைக் குறிப்பில் இதைப் பதிவு செய்கிறார். உண்மையில் இது வள்ளலாரை எதிர்த்து எழுதப்பட்ட நூல். அப்படி வள்ளலார் வடலூரில் உருவாக்கிய கட்டிடம் இடி விழுந்து தகர்ந்து விட்டது என்ற செய்தியும் வள்ளலாருக்கு எதிராக மேற்குறிப்பிட்ட நாயகர் தனது நூலில் எழுதினார். அது உண்மையல்ல; அந்தக் கட்டிடம் தாமரை வடிவில் இப்போதும் காட்சியளிக்கிறது. கட்டிடத்துக்கு முன்பு போடப்பட்ட பந்தல்தான் தீப்பற்றி எரிந்தது.

ம.பொ.சி.யும் தில்லை கோயிலில் தீட்சதர்கள் வள்ளலாரை அவமதித்ததற்கு சான்றுகள் இல்லை என்றே எழுதுகிறார். “வருவார் அழைத்து வாடி வடலூர் வடதிசைக்கே” என்ற கீர்த்தனை ஒன்றைத் தவிர வேறு சான்றுகள் இல்லை என்று ம.பொ.சி. சாதிக்கிறார். உண்மையில் வள்ளலாரே அருட்பா உரை நடைப் பகுதியில் சிதம்பரம் கோயிலைத் தான் தனது திருச்சபைகளின் வழியாக புதிதாக உருவாக்கினேன்” என்று எழுதியிருக்கிறார். தனது ஞானசபைக்கு அதுதான் உண்மை. சிதம்பரம் என்பதை வலியுறுத்த ‘உத்திரஞான சிதம்பரம்’ என்றே வள்ளலார் அழைத்தார், ம.பொ.சி.யின் ஒரு சார்பு பார்வையினால் இந்த ஆதாரங்களை மறைத்து தனது ‘விபீடண’ சிந்தனையை வெளிப்படுத்துகிறார்.

சமரச சன்மார்க்க சங்கம், சத்திய ஞானசபை, சுத்த சன்மார்க்க சத்திய தருமச் சாலை என்ற பெயர் களோடு தொடக்கத்தில் இணைத்திருந்த ‘வேத’ என்ற சொல்லை பிறகு முற்றிலுமாக நீக்கினார்.

வடலூருக்கு பெரியார் ஒருமுறை நேரில் பார்வையிடச் சென்ற போது, அசைவ உணவு உண்போருக்கு அனுமதி இல்லை என்ற அறிவிப்புப் பலகையைப் பார்த்து உள்ளே செல்ல நிர்வாகிகள் அழைத்தும் மறுத்து விட்டார். ஆறாம் திருமுறையில் தேர்வு செய்த பாடல் தொகுப்பை சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் சார்பில் பெரியார் வெளியிட்டார்.

தொடர்ந்து ‘ஞானசபை’ வருவதை நிறுத்திக் கொண்ட வள்ளலார் தனது சித்தி விளாகம் குடியிருப்பிலேயே தங்கிக் கொண்டார். எப்போதோ ஒருமுறை வருவதும் சன்மார்க்கிகளைச் சந்திப்பதும் வழக்கமாக்கிக் கொண்டார். இறுதியாக தன் குடிலுக்குள் சென்று கதவை தாளிட்டுக் கொண்டவர் திரும்பவே இல்லை. (1874-ஜன.30)

விடைபெறும் முன்அவர் “கடை விரித்தேன் கொள்வாரில்லை” என்று கூறியதாக கூறப்படுகிறது. இதற்கு வரலாற்றுப் பதிவு இல்லை; செவி வழி செய்தி தான்.

சொந்த சைவ நெறியையே எதிர்த்து மதம், குலம் சார்ந்த ஆச்சாரங்களைப் புறக்கணித்து மனிதர் மீது மனிதர் காட்டும் அன்பு எனும் ஜீவகாருண்யமே கடவுள் என்று பறைசாற்றி கோயில், சிலை, ஆகமம், சடங்குகளைப் புறக்கணித்து காவி உடைக்கு மாற்றாக வெண்ணிற உடை தரித்து பார்ப்பன வேத அடையாளங்களை நீக்கி கோயில் என்ற நிறுவனத்தைப் புறக்கணித்து புலால் மது அருந்தாத

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஈரோட்டில் கழகப் பெண்கள் சந்திப்பு



திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் மன்றம் இணைந்து நடத்திய “பெண்கள் சந்திப்பு” நிகழ்வு 5.2.2023 ஞாயிறு அன்று ஈரோடு பிரியாணிபாளையம் உணவக அரங்கில் நடைபெற்றது. ஈரோடு மணிமேகலை நிகழ்விற்கு தலைமையேற்று சுவையான கவிதை நடையில் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். திருப்பூர் கார்த்திகா வரவேற்புரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தொடக்கவுரையாற்றினார். பெரியார் தனது இயக்கத்தில் பெண்களுக்கு அளித்த முக்கியத்துவம் பற்றியும் பெரியார் நடத்திய மாநாடுகளில் தொடக்க உரையாகவோ கொடியேற்றி தொடங்கி வைப்பவராகவோ கட்டாயம் ஒரு பெண் தோழர் இருக்கும் படி பார்த்துக் கொண்டார் என்பதையும் பெண்களின் பங்களிப்பு அதிகம் இருக்கும் இயக்கங்கள் தங்களது பணியை சிறப்பாக செய்ய முடியும் என்பதை வலியுறுத்தி பேசினார்.

தொடர்ந்து ‘அம்பேத்கரும் பெரியாரும்’ என்ற தலைப்பில் திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, ‘மூடநம்பிக்கைகளை முறியடிப்போம்’ என்ற தலைப்பில் சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, ‘பெண் கல்வியும் தமிழ்நாடும்’ என்ற தலைப்பில் கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் சுதா, ‘சாவித்திரிபாய் புலே வாழ்வும் பணியும்’ என்ற தலைப்பில் மடத்துக்குளம் சங்கீதா, ‘கடந்த காலச்சூழலில் பெண்களின் நிலையும் இன்றைய சூழலில் பெண்களின் நிலையும்’ என்ற தலைப்பில் கோவை அமிலா சுந்தர், ‘பெண்களும் மனுதர்மமும்’ என்ற தலைப்பில் ஆனைமலை அனுசுயா, ‘மதங்களும் பெண்களும்’ என்ற தலைப்பில் இளம்பிள்ளை திவ்யா, ‘பெரியாரின் சிந்தனைகள்’ என்ற தலைப்பில் கடத்தூர் மாணவி இளமதி ஆகியோர் உரையாற்றினார்கள்.

அதைத் தொடர்ந்து பெண்கள் பொது வாழ்விற்கு வரத் தடையாக இருக்கின்ற கருத்துக்கள் குறித்த ஒரு பொது விவாத நிகழ்வும் நடந்தது. இவ்விவாத நிகழ்வை பல்லடம் தேன்மொழி தொகுத்து வழங்கினார். கலந்து கொண்ட தோழர்களைப் பாராட்டி கழகத் தலைவர் கொளத்தூர் மணி புத்தகங்களைப் பரிசாக வழங்கினார். நிகழ்வைத் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி ஒருங்கிணைத்தார். சென்னிமலை ஜோதி நன்றி கூற பெண்கள் சந்திப்பு நிகழ்வு நிறைவுப்பெற்றது.

நிகழ்விற்கான ஏற்பாடுகளை ஈரோடு தோழர்கள் செய்திருந்தார். நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, ஈரோடு மாவட்டத் தலைவர் செல்வராஜ், மாநகரத் தலைவர் குமார், மாநகர அமைப்பாளர் சத்தியமூர்த்தி, பிரியாணிபாளையம் உணவகத்தின் நிர்வாகி பாபு ஆகியோர் கலந்து கொண்டனர். பெரியாரின் பெண் விடுதலை, ஜாதி ஒழிப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு போன்ற கருத்துகளும் பெரியார் கருத்துகளை ஏற்றுக் கொண்டு வாழ்வது என்பது சுயமரியாதையையும் துணிச்சலையும் முன்னேற்றத்தையும் தருகிறது என்பதையும் தங்களது சொந்த வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து பெரியார் கொள்கையை பரப்ப வேண்டியதன் தேவையும் வலியுறுத்தினர். இவ்வாறாக ஒரு நாள் முழுவதும் பெரியாரின் சிந்தனைகளின் வீச்சு குறித்த விவாதமாகவும் கருத்து பகிர்தலாகவும் பெண்கள் சந்திப்பு நடைபெற்றது.

## நன்கொடை

குமாரபாளையம் தமிழன் இன்ஜினியரிங் லேத் தோழர் மாது ராஜி சரசுவின் மகன் திலகன்-சந்தியா தம்பதியருக்கு 29.1.2023 பெண் குழந்தை பிறந்தது. இந்த மகிழ்வான தருணத்தில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு வளர்ச்சி நிதியாக நன்கொடை ரூ.1000/- காவலாண்டி ஊர் சார்பாக வழங்கி உள்ளார்.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.300**

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 8973341377

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்த ஜாதியும் நேரடியாக ஒளி வடிவ கடவுளை வணங்கலாம் என்ற சமத்துவத்தை உருவாக்கி அர்ச்சகர் எனும் இடைத்தரகர்களை ஒழித்து வாழ்ந்து காட்டிய வள்ளலார் ஒரு புரட்சித் துறவி! பார்ப்பன எதிர்ப்பு மரபின் வரலாற்றுத் தொடர்ச்சி!

ஆதார நூல்கள் :

1) இராமலிங்க அடிகள் திருவரலாறு - ஊரன் அடிகளார்
2) அருட்பா மறுட்பா - பா.சரவணன்.
3) தமிழகத்தில் சமூக சீர்திருத்தம் - இரு நூற்றாண்டு வரலாறு - பேராசிரியர் அருணன்
4) வடலூரும் ஈரோடும் - திருக்குறள் முனுசாமி
5) வள்ளலாரின் ஆறாம் திருமறை பாடல்தொகுப்பு - குடி அரசு வெளியீடு
6) திரு.வி.க. வாழ்க்கை குறிப்புகள்
7) ஆறுமுக நாவலர் சரித்திரம் - கைலாசப் பிள்ளை
8) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு - மா.பொ.சி
9) கா.சுப்பிரமணியப் பிள்ளை இலக்கிய வரலாறு.

(நிறைவு)

# திருப்பூர் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம்




திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் கலந்துரையாடல் கூட்டம் 26.12.23 அன்று திருப்பூர் மங்கலம் சாலை கே ஆர் சி மஹாலில் மாலை 5.30 மணி அளவில் தொடங்கி நடைபெற்றது. ஆலோசனைக் கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார்.

அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி அறிமுக உரையாற்றினார். கழக நிர்வாகிகள் உடுமலை மற்றும் பல்லடம் பொறுப்பாளர்கள், மாநகர பொறுப்பாளர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் கழகத்தின் அடுத்த கட்ட செயல்பாடுகள், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சந்தா வசூல் மற்றும் பரப்புரைக்கான பல்வேறு ஆலோசனைகளை பேசினார்கள்.

தொடர்ந்து தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் மகிழவன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, இணையதளப் பொறுப்பாளர் பரிமளராசன், மாவட்டத் தலைவர் முகில் ராசு, தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், கழகப் பொருளாளர் துரைசாமி உள்ளிட்ட பொறுப்பாளர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

நிறைவாக பேசிய கழகத் தலைவர், கழகம் கொள்ளவிருக்கிற அடுத்தகட்ட செயல்பாடுகள், பரப்புரைக்கான யுக்திகள், தெருமுனைக் கூட்டத்தின் வடிவங்கள், கருத்தரங்கம் நடத்துவது, அமைப்பின் கட்டுமானத்தை விரிவாக்குவது போன்றவை குறித்து தோழர்களிடம் விரிவாகப் பேசினார். கலந்துரையாடல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

- தியாகி இம்மானுவேல் சேகரன் பேரவை பொதுச் செயலாளர் சந்திரபோஸ், மறைந்த தூத்துக்குடி மாவட்டத் தலைவர் பால்ராஜ், ஈரோடு கிழக்கு சட்ட மன்ற உறுப்பினர் திருமகன் ஈவெரா, த.பெ.தி.க பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் இணையர் தோழர் வசந்தி ஆகியோருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.
- பாஜக அரசின் சனாதன கொள்கைகளை விளக்கியும், பறிபோகும் நம் கல்வி வேலைவாய்ப்பு உரிமைகளை பொதுமக்களிடம் விளக்கும் விதமாக கிராம பகுதிகள் மற்றும் நகரங்களில் புதிய இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது;
- பயிற்சி வகுப்புகளை நடத்துவது;
- பெரியார் முழக்க சந்தாக்களை விரைந்து முடித்து தலைமைக்கு அனுப்புவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

நிறைவாக மாநகர செயலாளர் முத்து நன்றியுரை கூற நிகழ்வு மாலை 8.30 மணி அளவில் ஆலோசனைக் கூட்டம் நிறைவுற்றது.

**செய்தி : பரிமளராசன்**

# ஆனந்தி - அஸ்வின் குமார் இணையேற்பு விழா



சென்னை மயிலைப் பகுதி திராவிடர் விடுதலை கழகத் தோழர் அஸ்வின் குமார் - ஆனந்தி ஆகியோரின் சுயமரியாதை இணையேற்பு விழா 03.02.2023 வெள்ளி அன்று சென்னை தேனாம்பேட்டை, டாக்டர் கிரியப்பா சாலை, சமூக நலக்கூடத்தில் மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது. விழாவிற்கு தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் உமாபதி முன்னிலை வகித்தார்.

இணையேற்பு விழா மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்வை திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையேற்று நடத்தி வைத்தார். ஆயிரம் விளக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் மற்றும் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். கழக ஏட்டுக்கு ரூ.5,000/- நன்கொடை வழங்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 10th February 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN